## "தாய்மார்களிடையே அதிக மகப்பேற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகள்: கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு"

**Supervisor**
*Mrs. AWF. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. S. Safana,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

ஒவ்வொரு சமூகத்திலும் மக்களின் பிறப்புக்கள், இறப்புக்கள் ஆகியன தவிர்க்க முடியாதபடி முக்கியத்துவம் வாய்ந்தனவாகவுள்ளன. ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தை அக்குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகின்றது. மறுபுறத்தில் ஐந்தாவது குழந்தையின் பின்னரான பிள்ளைப்பேறு வளர்முக நாடுகளில் கவலையோடு பார்க்கப்படுகின்றது. அதிக மகப்பேறானது வளர்ந்துவரும் நாடுகளில் ஒரு முக்கியமான பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக இருக்கின்றது. ஏனென்றால் சமூகத்திற்கும் சுகாதாரத்திற்கும் எதிரான அதனுடைய தொடர்பானது தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் கெடுதலை ஏற்படுத்துகின்றது. அதிக மகப்பேற்றுடன் தொடர்புபட்டதாக பலகாரணிகள் காணப்படுகின்றன. சமூக, கலாசார காரணிகள், மீள் இனப்பெருக்க நடத்தைகள் மற்றும் சுகாதாரசேவைகள் எளிதில் கிடைக்கக்கூடியதும் பயன்படக்கூடியதுமான தன்மை என்பனவாகும். மகப்பேறு என்பது ஒரு பெண் 28 வாரத்திற்குப் பின் கர்ப்பத்தைச் சுமப்பதைக் குறித்து நிற்கின்றது. இக்கற்கையின் படி அதிக மகப்பேறு என்பது ஒரு பெண் ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்ட பிள்ளைகளை பெற்றெடுப்பதைக் குறித்து நிற்கின்றது. இன்று அதிக மகப்பேறானது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்திவருகின்றது. அந்தவகையில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலுள்ள அதிக மகப்பேற்றுடைய தாய்மார்களை இவ்வாய்வு அடையாளம் காண முயற்சித்துள்ளது. இத்தகைய அதிகரித்த மகப்பேற்றில் செல்வாக்குச் காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான மும்மொழிவுகளை விதந்துரைக்க இவ்வாய்வு முனைந்துள்ளது. இவ்வாய்வானது, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் அதிக மகப்பேறுடைய பெண்கள் மீது தாக்கம் செலுத்தும் சமூக, கலாசார காரணிகளை கண்டறிதலை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் மக்கள் மத்தியில் குடும்பத் திட்டமிடல் பற்றிய அறிவு மற்றும் பயன்பாடு பற்றியும் இவ்வாய்வு இனங்காணமுயன்றுள்ளது. இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவாக 20 வினாக்கொத்துக்கள் (Questionnaire) மூலம் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் நோக்க மாதிரி நுட்பமுறை அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. நேர்காணலுக்காக 10 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 01 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத் தரவுசேகரித்தலில், பிரதேச செயலக அறிக்கைகள், MOH ஆண்டறிக்கை, மற்றும் முன்னர் நடாத்தப்பட்ட ஆய்வுகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறாக சேகரிக்கப்பட்ட தரவுகள் சாதாரணமுறை மூலமும் SPSS மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்படடுள்ளன. இறுதியாக இவ்வாய்வில் கிண்ணியாப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் 19.3%ஆன அதிக மகப்பேற்றுடைய தாய்மார்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதிக மகப்பேற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக

இளவயதில் திருமணம் முடித்தல், இனம், குறைவானகல்வி, தொழிலின்மை, குறைந்த வருமானம், தனிக்குடும்ப அமைப்பு, எதிர்பாராத கர்ப்பம், குடும்பத் திட்டமிடல் பற்றிய குறைவான அறிவு, குடும்பத்திட்டமிடல் முறைகளின் பாவனை குறைவு போன்ற சமூக, கலாசாரக் காரணிகள் கண்டறியப்பட்டுள்ளன.

**Key Words:** அதிகமகப்பேறு, சமூக, கலாசார காரணிகள்